# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No. I, Mettur
## Case No :M.C.No.19/2022

Prosecution witness : **ம.சா. 1** **Date : 11.05.2023**

| | |
|---|---|
| **Name : செல்வலட்சுமி** | Caste : வன்னியர் |
| **Husband's Name : தேவராஜன்** | Calling : - |
| Village : கருங்கல்லூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 40 |

(Complainant and Respondent present)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) இன்று காலை நான் கோர்ட்டிற்கு வந்த கார் என்னுடையதா என்றால் காரில் வரவில்லை. பஸ்ஸில்தான் வந்தேன். நான் என் தங்கை என் மகள் ஆகிய மூன்று பேரும் நீதிமன்றத்திற்கு வந்தோம். ஒவ்வொரு இந்த வழக்கின் வாய்தாவிற்கு என் தங்கை என்னுடன் நீதிமன்றத்திற்கு வருவதால் அவருக்கு வழக்கு உள்ளதா என்றால் இல்லை அவர் எனக்கு துணையாக வருகிறார். நானும் என் கணவரும் கடைசியாக எங்கு குடியிருந்தோம் என்றால் கொளத்தூரில் உள்ள சிங்காரவேலன் என்பவர் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தோம். என் கணவர் தினமும் குடித்துவிட்டு என்னிடம் சண்டை செய்யும் விசயம் அக்கம் பக்கம் வீட்டில் குடியிருப்பவர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அப்போது அக்கம் பக்கம் வீட்டில் குடியிருந்தவர்கள் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் அவர்கள் காலி செய்துகொண்டு சென்றுவிட்டார்கள். என் கணவர் அடிக்கடி குடித்துவிட்டு தகராறு செய்வதாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

2) என் கணவர் அடிக்கடி குடித்துவிட்டு தகராறு செய்வதாக கருங்கல்லூரில் உள்ள பஞ்சாயத்து தலைவர் மற்றும் பஞ்சாயத்தார்களிடம் பஞ்சாயத்து பேசினோமா என்றால் கருங்கல்லூர் தலைவர் சின்னப்பன் என்பவர் அடிக்கடி பஞ்சாயத்து பேசுவார். என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக சொல்லியுள்ளதால் அவர் எந்தெந்த இடங்களில் வாங்கி விற்றார் என்று

குறிப்பிட்டு தெரியுமா என்றால் நேரிடையாக தெரியாது. என் கணவர் யூனியன் ஆபிஸில் தினக்கூலி அடிப்படையில்தான் 2019ம் ஆண்டு வரை வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். என் கணவருக்கு அரசு சம்மந்தப்பட்ட காண்ட்ராக்ட் செய்யும்போது அதற்கான சால்வன்சி என் கணவருக்கு உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கொளத்தூர் நால்ரோட்டில் மாதேஸ்வரன்மலை மெயின்ரோட்டில் உள்ள KR GRINDER WHOLE SALE கடை எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 2019ம் வருடம் கட்டப்பட்டது. மேற்படி கட்டடம் பெரிய அளவில் கட்டவேண்டும் என்பதற்காக பீம் வைத்து கட்டப்பட்டது என்றால் சரிதான். அங்கு வீடுகட்டி வாடகை விடுவதற்காக வங்கியில் லோன் பெற முயற்சி செய்தார் என்றால் சரிதான்.

3) அந்த கட்டடம் கட்டுவதற்காக கையில் இருந்த பணத்தை எல்லாம் செலவழித்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தங்கையிடம் இருந்து பணம், நகை ஆகியவற்றை வாங்கியுள்ளார். ஒரு வருடத்திற்கு முன்னால் மேட்டூர் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து என் தங்கையிடம் வாங்கிய 45 பவுன் நகைகள் மற்றும் பணம் ரூ.1,50,000/- ஆகியவற்றை என் கணவரிடமிருந்து பெற்றுக்கொண்டு இனிமேல் என் தங்கைக்கும் என் கணவருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என எழுதி கொடுத்துவிட்டு சென்றுள்ளார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. என் கணவருக்கு நிறைய பெண்களுடன் தொடர்பு உள்ளதாக நான் சொல்வதால் அதற்கான ஆதாரங்கள் ஏதாவது வைத்துள்ளேனா என்றால் அவருக்கு நிறைய போன்கால்கள் வந்தது. அது விசயமாக கருங்கல்லூர் தலைவரிடம் புகார் தெரிவித்திருந்தேன். என் கணவரின் செல்போனுக்கு எந்த எண்ணில் இருந்து போன் வருகிறது என்று அந்த எண்ணை நான் குறித்து வைத்துள்ளேனா என்றால் வைத்திருந்தேன் தற்போது அது தொலைந்துவிட்டது. அந்த போன் எண்ணுக்குரிய பெண்ணின் பெயர் தெரியுமா என்றால் தெரியும்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**

**மேட்டூர்.**